செய்தி வெளியீடு எண்:776 நாள்: 26.12.12

## தமிழ் வளர்ச்சித்துறை சார்பில்
## 500 அரசு அலுவலர்கள் பங்கேற்கும்

## சென்னை மாவட்ட
## ஆட்சிமொழிப் பயிலரங்கம்
## கருத்தரங்கம்

## 27,28 ஆம் தேதி சென்னையில் நடைபெறுகிறது

*******************

சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் 500 பேர் பங்கேற்கும் சென்னை மாவட்ட ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் டிசம்பர் 27,28 ஆம் தேதிகளில், எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற உள்ளது.

**ஆட்சிமொழி** இந்திய விடுதலைக்குப் பின்னர், சென்னை மாகாணம், சென்னை மாநிலமாக மாறிய பின்னர், ஆங்கில ஆதிக்கத்தால் மறைந்துப் போன வட்டார மொழிகளை மீட்டெடுக்கவும், மக்களுக்குப் புரிந்த, மக்கள் அறிந்த மொழியில் ஆட்சி நடைபெறவும், 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 27–ஆம் நாள் தமிழகத்தின் ஆட்சிமொழி ‘‘தமிழ்’’ என சட்டம் இயற்றப்பட்டது. 1957 ஆம் ஆண்டு முதல் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

**தமிழ் வளர்ச்சித்துறை** மக்களுக்குப் புரிந்த மொழியில், மக்கள் அறிந்த மொழியில் அலுவல் பணி நடைபெற தமிழ் வளர்ச்சித்துறை தோற்றுவிக்கப்பட்டது. கடிதப் போக்குவரத்து, பதிவேடுகள் பேணுதல், படிவங்கள் எழுதுதல், அரசு அலுவலர்களும் பணியாளர்களும் தமிழிலேயே கையொப்பமிடுதல் எனப் பல்வேறு நிலைகளில் **“அன்னைத் தமிழே ஆட்சிமொழி”** என்ற நிலையினை எய்திட **“தமிழ் வளர்ச்சித்துறை”** தொடர்ந்து பல்வேறு நிலைகளில் ஆட்சிமொழித் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

**ஆட்சிமொழிப் பயிலரங்கம்** ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தின் ஒரு பகுதியாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் **“இன்றும் தமிழ் என்றும் தமிழ்”** என்ற

இலக்கினை எய்த மாவட்டந்தோறும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பங்கேற்கும் ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் நடத்தப்பட்டு வருகிறது. 31 மாவட்டங்களிலும் பயிலரங்கம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடத்தி முடிக்கப்பட்டன.

**<u>கருத்தரங்கம்</u>** சென்னை மாவட்ட ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம், சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலை அரங்கத்தில் டிசம்பர் 27,28 ஆம் தேதிகளில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சிக்கு சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்(பொறுப்பு) திருமதி இரா. சீத்தாலட்சுமி அவர்கள் முன்னிலை வகிக்கிறார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் கோ.விசயராகவன் வாழ்த்துரை வழங்குகிறார். **மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு, இளைஞர்நலம், சட்டம், சிறைத்துறை மற்றும் நீதித்துறை அமைச்சர் என்.ஆர்.சிவபதி அவர்கள் பயிலரங்கத்தைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.** காவல்துறைத் தலைவர்.திரு.இரா.ஆறுமுகம் அவர்கள் மற்றும் தமிழறிஞர்கள், உயர் அலுவலர்கள் பங்கேற்றுக் கருத்துரை வழங்க உள்ளனர். இவ்விழாவில் சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறை வாரியங்கள், கழகங்கள், உள்ளாட்சி நிறுவனங்களைச் சேர்ந்த 500 அரசு அலுவலர்கள் பங்கேற்கின்றனர். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைச் சென்னை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு.வெ.குமார் அவர்கள் செய்து வருகிறார்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**